**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**

**பாராளுமன்றம்**

---

# 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம்

---

*(1993, பெப்ருவரி மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1993, பெப்ருவரி மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* — *தபாற் செலவு : ரூபா 1 00*

## 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம்

[1993, பெப்ருவரி மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 4/90
2073

### 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) கட்டுப்பாட்டாளரானவர், அவர் அவசியமானதெனக் கருதக்கூடிய வாறான அத்தகைய விசாரணையின்பின்னர்—

(அ) ஏதேனும் தேயிலைத் தொழிற்சாலையின் கட்டடம் அல்லது சாதனம் அல்லது தொழிற்படுத்துமுறையானது சிறந்த தரத்தையுடைய தயாரிக்கப்பட்ட தேயிலையை உற்பத்தி செய்வதற்கு உகந்ததான நியமத்தையுடையதொன்றன்று என ; அல்லது

(ஆ) தேயிலைத் தொழிற்சாலையின் சொந்தக்காரர் அத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தயாரிக்கப்பட்ட தேயிலைக்குக் கிடைக்கும் விலையைக் கருத்தில் கொண்டு கட்டுப்பாட்டாளரால் தீர்மானிக்கப்படுகின்றவாறு செலுத்தப்படற்பாலதான நியாயமான விலையிலும் பார்க்கக் குறைந்தவொரு விலையை, அத்தகைய தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதற்கென அவரால் கொள்வனவு செய்யப்பட்ட பச்சைத் தேயிலைக் கொழுந்திற்குச் செலுத்தியுள்ளாரென ; அல்லது

(இ) தேயிலைத் தொழிற்சாலையின் சொந்தக்காரர், அத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதற்கென அவரால் கொள்வனவு செய்யப்பட்ட பச்சைத் தேயிலைக் கொழுந்துக்குப் பந்தி (ஆ) வில் குறிப்பிடு செய்யப்பட்ட நியாயமான விலையைச் செலுத்துவதைத் தாமதித்துள்ளாரென,

திருப்திப்படுமிடத்து, அத்தகைய தேயிலைத் தொழிற்சாலையின் பதிவை, அவசியமானதாயிருக்குமிடத்து இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்; அன்றுறு —

(i) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில், அத்தகைய தேயிலைத் தொழிற்சாலையின் சொந்தக்காரர் அத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் தயாரிக்கப்பட்ட தேயிலையை எந்தத் தரகருக்கு விற்ருரோ அந்த எவரேனும் தரகரை அத்தகைய சொந்தக்காரரால் கொள்வனவு செய்யப்பட்ட பச்சைத் தேயிலைக் கொழுந்துக்கு, அவரால் செலுத்தப்பட்ட உண்மையான விலைக்கும், கட்டுப்பாட்டாளரால் தீர்மானிக்கப்பட்டவாறு பச்சைத் தேயிலைக் கொழுந்துக்குள்ள நியாயமான விலைக்கும் இடையிலான வித்தியாசத்துக்குச் சமமானவொரு தொகையை அத்தகைய விற்பனையின் வரும்படிகளிலிருந்து கழிக்குமாறும்,

(ii) பந்தி (இ) யில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில், அத்தகைய தேயிலைத் தொழிற்சாலையின் சொந்தக்காரர் அத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் தயாரிக்கப்பட்ட தேயிலையை, எந்தத் தரகருக்கு விற்ருரோ அந்த எவரேனும் தரகரை அத்தகைய பச்சைத் தேயிலைக் கொழுந்துக்குக் கட்டுப்பாட்டாளரால் தீர்மானிக்கப்பட்ட நியாயமான விலைக்குச் சமமானவொரு தொகையை அத்தகைய விற்பனையின் வரும்படிகளிலிருந்து கழிக்குமாறும்,

அத்துடன் அவ்வாறு கழிக்கப்பட்ட பணத்தொகையை அவருக்கு, அவரால் அத்தகைய தொழிற்சாலைக்கு அத்தகைய பச்சைத் தேயிலைக் கொழுந்தை வழங்கும் ஆளுக்குச் செலுத்தப்படுவதற்கென, அனுப்பிவைக்குமாறும் பணிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் —

"(1) உரிமம் பெற்ற வியாபாரி எவரும்—

(அ) அத்தகைய தேயிலை அல்லது கொழுந்து தொடர்பில் வலிதான வெளிப்படுத்துகையொன்று அத்தகைய தேயிலையை அல்லது கொழுந்தை ஒப்படைக்கும் ஆளினால் அவருக்குக் கொடுத்துதவப்பட்டாலன்றி; அத்துடன்

(ஆ) அத்தகைய தேயிலையை அல்லது கொழுந்தை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்னும் பயன்பாட்டிலமைந்த வலிதான வெளிப்படுத்துகை

யொன்றை அத்தகைய தேயிலையை அல்லது கொழுந்தை ஒப்படைக்கும் ஆளுக்கு அவர் கொடுத்துதவினாலன்றி,

அவர், எந்த தோட்டத்துக்கு அல்லது சிறுபற்று நிலத்துக்குப் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக உள்ளாரோ அந்த ஏதேனும் தோட்டத்தின் அல்லது சிறு பற்று நிலத்தின் விளைபொருளாக இல்லாத ஏதேனும் தயாரிக்கப்பட்ட தேயிலையை அல்லது பச்சைத் தேயிலைக் கொழுந்தை ஒப்படைக்கப் பெறுதலோ ஒப்படைக்கப்பெறச் செய்வித்தலோ அல்லது அதற்கு அனுமதித்தலோ ஆகாது.

(2) உற்பத்தியாளர் எவரும்—

(அ) அத்தகைய தேயிலைக் கொழுந்து தொடர்பில் வலிதான வெளிப்படுத்துகையொன்று அத்தகைய தேயிலைக் கொழுந்தை ஒப்படைக்கும் ஆளினால் அவருக்குக் கொடுத்துதவப்பட்டாலன்றி ; அத்துடன்

(ஆ) அத்தகைய தேயிலையை அவர் ஏற்றுக்கொண்டுள்ளுள்ளார் என்னும் பயன்பாட்டிலமைந்த வலிதான வெளிப்படுத்துகையொன்றை அத்தகைய தேயிலைக் கொழுந்தை ஒப்படைக்கும் ஆளுக்கு அவர் கொடுத்துதவினாலன்றி,

அவர், எந்த தோட்டத்துக்கு அல்லது சிறுபற்று நிலத்துக்குப் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக உள்ளாரோ அந்த ஏதேனும் தோட்டத்தின் அல்லது சிறு பற்று நிலத்தின் விளைபொருளாக இல்லாத பச்சைத் தேயிலைக் கொழுந்தை ஒப்படைக்கப் பெறுதலோ ஒப்படைக்கப்பெறச் செய்வித்தலோ அல்லது அதற்கு அனுமதித்தலோ ஆகாது." ; அத்துடன்

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில் (ஆ) என்னும் பந்தியில், "பொருட்களை விற்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பொருட்களை விற்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) பந்தி (உ) விற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:—

"(உ) எட்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ், ஏதேனும் பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலையின் பதிவை இடை நிறுத்துகின்ற அல்லது இல்லாதொழிக்கின்ற ஆணையாளரின் முடிவினால்;" அத்துடன்

(2) "அத்தகைய ஆளுக்கு" என்ற சொற்கள் தொடக்கம் அவ்வுட்பிரிவின் இறுதி வரையிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலமும்:—

"அத்தகைய ஆளுக்கு அத்தகைய முடிவு அல்லது இல்லாதொழிப்பு அல்லது இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இருபத்தெட்டு நாட்களுக்குள்ளாக, அத்தகைய முடிவுக்கு அல்லது இல்லாதொழிந்தலுக்கு அல்லது இடைநிறுத்துகைக்கு எதிராக அமைச்சருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "கட்டுப்பாட்டாளர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை அதிலிருந்து விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கான பொதுவான திருத்தம்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் எவையேனும் ஏற்பாடுகளில் "கட்டுப்பாட்டாளர்" என்ற சொல் தோன்றும் இடங்களிலெல்லாம், "ஆணையாளர்" என்ற சொல் பதிலிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

7. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.